# கைத்தொழில்

## பொதுவான செயலாற்றம்

உற்பத்தி, ஏற்றுமதிகள், கூட்டப்பட்ட பெறுமதி என்பனவற்றின் உயர் மட்டங்களில் பிரதிபலிக்கப்பட்டவாறு 1990 இல், கைத்தொழில்துறையின் செயலாற்றம் குறிப்பிடத்தக்கதொரு மேம்பாட்டினைக் காட்டியது. நாட்டின் பல பாகங்களில் உள்நாட்டுக் குழப்பங்கள் குறைவடைந்ததைத் தொடர்ந்து கைத்தொழில் நடவடிக்கைகள் புத்துயிர் பெற்றமையே இதற்கான பெருமளவு காரணமாக அமைந்தது. உண்மை நியதிகளில் 1990 இல் கைத்தொழில் வெளியீடு 14 சதவீதத்தினால் அதிகரித்திருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது 1984 இலிருந்து பதிவு செய்யப்பட்ட அதியுயர் வளர்ச்சி வீதமாகும். கைத்தொழில் வெளியீட்டின் கவர்ச்சிகரமான வளர்ச்சியானது தனியார்துறைக் கைத்தொழில்களின் தொடர்ச்சியான விரிவாக்கம், அரசதுறைக் கைத்தொழில்களின் சிறப்பான செயலாற்றம் ஆகிய இரண்டிலிருந்தும் உருவானதாகும். தனியார்துறைக் கைத்தொழில், அரசதுறைக் கைத்தொழில் ஆகிய ஒவ்வொன்றினதும் வெளியீடு 14 சதவீதத்தினால் அதிகரித்தது.

தனியார்துறையின் உற்பத்திப் பெறுபேறுகள் அனைத்துத்துணை வகைகளிலும் பதிவு செய்யப்பட்டன. புடவையும் அணியும் ஆடைகளும், உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள், உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள், இரசாயனங்கள், உணவு குடிபானமும் புகையிலையும் ஆகிய வகைகளின் வெளியீடுகளில் பெரும் அதிகரிப்புக்கள் காணப்பட்டன. அரசதுறைக் கைத்தொழில்களில் அதிகரித்த உற்பத்தியானது முதன்மையாகப் பெற்றோலியத் தூய்மியின் மேம்பட்ட வெளியீட்டு மட்டத்தினைச் சார்ந்ததாக இருந்தது.

கைத்தொழில் ஏற்றுமதிகளின் பெறுமதி 1989 இன் ரூ. 284,700 இலட்சத்திலிருந்து 1990 இல் ரூ. 415,100 இலட்சத்திற்கு அதிகரித்தது. மொத்த ஏற்றுமதி வருவாய்களில் கைத்தொழில் ஏற்றுமதிகளின் சார்புப் பங்கு 1989 இன் 51 சதவீதத்திலிருந்து 1990 இல் 52 சதவீதத்திற்கு அதிகரித்தது. தயாரிக்கப்பட்ட ஆடைகளும் பெற்றோலிய உற்பத்திகளும் தொடர்ந்தும் கைத்தொழில் ஏற்றுமதிகளின் முதன்மை நிலையிலேயே இருந்து அத்தகைய ஏற்றுமதிகளின் மொத்தப் பெறுமதியில் கிட்டத்தட்ட 70 சதவீதத்திற்கு வகை கூறின.

## கைத்தொழில் கொள்கை

1989 இறுதியில் கைத்தொழில் அறிவியல் தொழில்நுட்ப அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய கைத்தொழில் உத்தியின் நடைமுறைப்படுத்தல் தொடர்பான ஆரம்ப நடவடிக்கைகள் 1990 இல் மேற்கொள்ளப்பட்டன. வெளிநாட்டு முதலீட்டாளர்களின் நடவடிக்கைகளை இலகுவாக்குவதற்கு வசதி செய்து கொடுக்கும் பொருட்டு 1990 சனவரியில் கொழும்புப் பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழுவும் வெளிநாட்டு முதலீட்டு மதியுரைக் குழுவும் ஒன்றிணைக்கப்பட்டு ஒருமுகப்படுத்தப்பட்ட நிலையமொன்று உருவாக்கப்பட்டது. வெளிநாட்டு முதலீடுகள் தொடர்பான ஒப்புதல் நடைமுறைகளும் இலகுபடுத்தப்பட்டன. 1990 யூனில், ஏற்கனவேயுள்ள கூட்டு நிலையங்களினது பங்குகளின் 40 சதவீதம் வரையிலானவற்றை முன் ஒப்புதல் இன்றியே கொள்வனவு செய்வதற்கு வெளிநாட்டவர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

1990 இல் அமைச்சரவையினால் பல அரசதுறைக் கைத்தொழில் முயற்சி களை வரையறுக்கப்பட்ட பொறுப்புடைய கூட்டுநிலையங்களாக மாற்றுவதற் கான ஒப்புதல் வழங்கப்பட்டது. துல்கிரியா புடவை ஆலை, பூகொட புடவை ஆலை, வரையறுக்கப்பட்ட இலங்கை ஒட்சிசன், தன்கொட்டுவ பேபர்சாலின், வெயாங்கொட புடவை ஆலை, மத்தேகம புடவை ஆலை, லங்கா மில்க் பூட்ஸ் என்பனவற்றையும் எண்ணெய்க் கொழுப்பு, இலங்கை ரயர், இலங்கை தோல் உற்பத்திப் பொருட்கள், இலங்கை ஒட்டுப்பலகை, இலங்கை அரச வன்கலம் ஆகிய கூட்டுத்தாபனங்களையும் இவை உள்ளடக்குகின்றன.

**உற்பத்தி**

கைத்தொழில் வெளியீட்டின் பெறுமதி உண்மை நியதிகளில் 1989 இன் 6 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1990 இல் கணிசமாக 14 சதவீதத் தினால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. அதி உயர் வளர்ச்சி வீத மானது தனியார்துறைக் கைத்தொழில்களின் 14 சதவீத விரிவாக்கத்தினதும் அரசதுறைக் கைத்தொழில்களின் இதே அளவான வளர்ச்சியினதும் கூட்டு விளை வாகும். பெற்றோலிய வெளியீட்டின் பெறுமதி நீங்கலாகக் கைத்தொழில் உற்பத்தியானது 7 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

அட்டவணை 1.18

**கைத்தொழில் உற்பத்திகளின் பெறுமதி 1986–1990**
**(நடைமுறை விலைகள்)**

பத்து இலட்சம் ரூபாய்களில்

| வகை | 1986 | 1987 | 1988 | 1989* | 1990(அ) |
|---|---|---|---|---|---|
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை .. | 12,129 | 12,962 | 14,675 | 18,458 | 21,955 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் .. | 12,088 | 15,428 | 18,166 | 22,073 | 27,930 |
| 3. மரத்துண்டு மர உற்பத்திகள் (தளபாடங்கள் உட்பட | 632 | 677 | 640 | 667 | 721 |
| 4. தாள், தாள் உற்பததிகள் .. | 1.289 | 1,372 | 1,492 | 1,456 | 1,880 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் .. | 11,088 | 13,477 | 13,681 | 12,041 | 21,215 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் (பெற்றோலியமும் நிலக்கரியும் தவிர்ந்த) .. | 2,053 | 2,156 | 2,267 | 6,007 | 7,554 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் .. | 281 | 307 | 487 | 792 | 1,006 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள், பொறிகளும், போக்குவரத்துக் கருவிகளும் .. | 1,757 | 2,006 | 2,477 | 3,182 | 4,199 |
| 9. வேறு எவ்விடத்திலும் குறிப்பிடப்படாத உற்பத்திகள் .. | 136 | 155 | 178 | 231 | 296 |
| மொத்தம் | 41,453 | 48.540 | 54,063 | 64.907 | 86,756 |

(அ) தற்காலிகமானவை.
* திருத்தப்பட்டது.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

1990 இல் உற்பத்தியில் அதிகரிப்புக்களைப் பதிவு செய்த கைத்தொழில் துணைத் துறைகளாக இரசாயனம், பெற்றோலிய, பிளாத்திக்கு உற்பத்திப் பொருட்கள் (37 சதவீதம்), அடிப்படை உலோக உற்பத்திகள் (24 சதவீதம்), உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் (12 சதவீதம்), புடவைகள் அணியும் ஆடைகள், தோல் உற்பத்திப் பொருட்கள் (13 சதவீதம்), தாளும் தாள் உற்பத்திப் பொருட்களும் (9 சதவீதம்), உணவு குடிபானம் புகையிலை (7 சதவீதம்) என்பன விளங்கின.

இரசாயனங்கள், பெற்றோலியம், பிளாத்திக்கு உற்பத்திகள் வகையின் வெளியீட்டின் கணிசமான அதிகரிப்புக்கு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தியின் அதிகூடிய அதிகரிப்பு முதன்மைக் காரணமாக அமைந்தது. இந்த வகையில் தனியார்துறை உற்பத்தியும் 10 சதவீதத்தினால் அதிகரித்து வண்ணக் கலவைகள், மெருகேற்றும் பொருட்கள், சவர்க்காரம், ஒப்பனை, வாசனைப் பொருட்கள், பிளாத்திக்கு மற்றும் இறப்பர் உற்பத்திகள் என்பவற்றின் வெளியீட்டில் பெருமளவிற்குப் பிரதிபலித்தது. முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்திற்கு உள்ளேயும் வெளியேயும் அணியும் ஆடைகள் கைத்தொழில் வகையின் தொடர்ச்சியான விரிவாக்கம் புடவைகள் அணியும் ஆடைகள், தோல் உற்பத்திப் பொருட்கள் வகையின் அதிகரித்த வெளியீட்டு மட்டத்திற்கு உதவிய முதன்மைக் காரணியாக அமைந்தது. எனினும் துல்கிரியா மற்றும் பூகொடை புடவை ஆலைகள் தனியார் மயப்படுத்தப்பட்டமையின் காரணமாகத் தேசிய புடவைக் கூட்டுத்தாபனத்தின் வெளியீட்டு மட்டம் குறைந்தமையினால் இந்த வகையின் அரசதுறை உற்பத்தி கணிசமாக 44 சதவித விழ்ச்சியைப் பதிவு செய்தது. உணவு, குடிபானம், புகையிலை வகையில் புகையிலை, சீனி, தேயிலைப் பொதியிடல், மென்பானங்கள், காற்றூட்டப்பட்ட நீர், வெறியப் பொருட்கள், இனிப்புப் பண்டங்கள், தாவர எண்ணெய், கொழுப்பு என்பனவற்றின் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள தனியார்துறைக் கைத்தொழில்களிலேயே அதிகரித்த வெளியீட்டு மட்டங்கள் பதிவு செய்யப்பட்டன. எனினும் இலங்கை எண்ணெய் கொழுப்பு, தேசிய உப்பு ஆகிய கூட்டுத்தாபனங்களின் வெளியீட்டில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சி காரணமாக இவ்வகையைச் சார்ந்த அரசதுறைக் கைத்தொழில்களின் உற்பத்தி வீழ்ச்சியைப் பதிவு செய்தது.

தாள், மற்றும் தாள் உற்பத்திப் பொருட்கள் வகையின் அதிகரித்த வெளியீட்டு மட்டத்திற்குத் தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனத்தினதும் தனியார்துறைக் கைத்தொழில்களினதும் உற்பத்தி அதிகரிப்பினைக் காரணமாகக் கூறலாம். உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்தி வகையில் கண்ணாடி மற்றும் மட்பாண்டப் பொருட்களின் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள தனியார்துறைக் கைத்தொழில்களிலேயே பெரும்பாலும் அதிகரித்த வெளியீட்டு மட்டங்கள் பதிவு செய்யப்பட்டன. அடிப்படை உலோக உற்பத்திகள் வகையில் அதிகரித்த வெளியீட்டு மட்டத்திற்கு உருக்குக் கூட்டுத்தாபனத்தின் அதிகரித்த உற்பத்தி பொறுப்பாக இருந்தது. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் துறையின் முன்னேற்றமானது பெரும்பாலும் உருவமைக்கப்பட்ட உலோகம், பொறிகளும் கருவிகளும், கட்டுமான உலோக உற்பத்திப் பொருட்கள் போன்ற தனியார்துறைக் கைத்தொழில்களின் உற்பத்தி அதிகரிப்பின் காரணமாக ஏற்பட்டதாகும்.

## அரச துறையின் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்




இலங்கை மத்திய வங்கி.

நடைமுறை நியதிகளில் 1990 இல் கைத்தொழில் உற்பத்தியின் பெறுமதி 34 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இரசாயனங்கள், பெற்றோலியம், பிளாத்திக்கு உற்பத்திப் பொருட்கள் என்பனவற்றின் பெறுமதி 76 சதவீதத்தினாலும், உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகளின் பெறுமதி 32 சதவீதத்தினாலும், தாள் மற்றும் தாள் உற்பத்திப் பொருட்களின் பெறுமதி 29 சதவீதத்தினாலும், அடிப்படை உலோக உற்பத்திகளின் பெறுமதி 27 சதவீதத்தினாலும், உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திப் பொருட்களின் பெறுமதி 26 சதவீதத்தினாலும், புடவைகள், அணியும் ஆடைகள், தோல் பொருட்கள் என்பனவற்றின் பெறுமதி 27 சதவீதத்தினாலும், உணவு, குடிவகை, புகையிலை என்பனவற்றின் பெறுமதி 19 சதவீதத்தினாலும், மர மற்றும் மர உற்பத்திப் பொருட்களின் பெறுமதி 8 சதவீதத்தினாலும் அதிகரித்தது.

### அரச துறைக் கைத்தொழில்கள்

1990 இல் அரசதுறைக் கைத்தொழில் வெளியீடு 1989 இன் 21 சத வீழ்ச்சிக்கு எதிராக உண்மை நியதிகளில் 14 சதவீதத்தினால் அதிகரித்தது. அரசதுறைக் கைத்தொழில் வெளியீட்டின் கணிசமான அதிகரிப்பு முழுமையாகவே இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மேம்பட்ட உற்பத்தியின் காரணமாக ஏற்பட்டதாகும். பெற்றோலியம் நீக்கப்படுமிடத்து அரசதுறைக் கைத்தொழில் வெளியீடு 21 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

அட்டவணை 1.19

அரசதுறை முதன்மைக் கைத்தொழில்களின் வெளியீட்டுச் சுட்டெண் 1988 — 1990
(1977=100)

| வகை | 1988 | 1989 | 1990 (அ) |
|---|---|---|---|
| 1. உணவு, குடிபானம், புகையிலை .. | 31.0 | 26.2 | 22.6 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் .. | 189.7 | 173.7 | 96.6 |
| 2.1 புடவைகள் .. | 257.6 | 236.2 | 128.2 |
| 3. மரத்துண்டு மர உற்பத்திகள் .. | 70.9 | 31.2 | 22.2 |
| 4. தாள், தாள் உற்பத்திகள் .. | 153.7 | 107.9 | 118.1 |
| 5. இரசாயன உற்பத்திகள் .. | 119.3 | 83.6 | 122.4 |
| 5.1 பெற்றோலிய உற்பத்திகள் .. | 120.7 | 83.6 | 124.3 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் .. | 142.4 | 137.2 | 137.5 |
| 6.1 சீமெந்து .. | 175.1 | 164.8 | 156.6 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் ... | 86.1 | 76.4 | 80.3 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் .. | 70.3 | 32.5 | 33.6 |
| எல்லா வகைகளும் .. | 114.0 | 88.0 | 100.0 |
| பெற்றோலிய உற்பத்திகள் தவிர்ந்த | 106.5 | 93.0 | 73.0 |

அ) தற்காலிகமானவை.

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

வெளியீட்டில் வீழ்ச்சிகளைப் பதிவுசெய்த அரசதுறைக் கைத்தொழில் முயற்சிகளாகத் தேசிய உப்பு (64 சதவீதம்), தேசிய புடவை (45 சதவீதம்), இலங்கை ஒட்டுப்பலகை (42 சதவீதம்), இலங்கைக் கனிப்பொருள் மணல்கள் (35 சதவீதம்), எண்ணெய், கொழுப்பு (16 சதவீதம்), இலங்கை சீமெந்து (5 சதவீதம்) என்பன விளங்கின.

தேசிய உப்புக் கூட்டுத்தாபனத்தின் வெளியீட்டு வீழ்ச்சிக்குத் திருப்தியற்ற பாதுகாப்பு நிலைமைகளின் காரணமாக வடக்கின் உப்பளங்களின் உற்பத்தி குறைந்தமையே முக்கிய காரணமாக அமைந்தது. தேசிய புடவைக் கூட்டுத் தாபனத்தின் உற்பத்தியின் அதிகூடிய வீழ்ச்சிக்கு இவ்வாண்டில் துல்கிரிய மற்றும் பூகொடை ஆகிய இரு புடவை ஆலைகளினதும் சொத்துரிமை தனியார் துறைக்கு மாற்றப்பட்டமை பெருமளவு காரணமாக அமைந்தது. இலங்கைக் கனிப்பொருள் மணல்கள் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தி வீழ்ச்சிக்கு இப்பிர தேசத்தில் நிலவிய உள்நாட்டுக் குழப்பங்கள் காரணமாகப் புல்மோட்டைத் தொழிற்சாலையின் வெளியீட்டு மட்டம் குறைவடைந்தமை முதன்மைக் காரணியாக அமைந்தது. சுண்ணக் கற்களின் குறைவான வழங்கல், இலங்கைச் சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தியில் பாதகமான தாக்கத்தினைக் கொண்டிருந்தது. வரையறுக்கப்பட்ட எண்ணெய் கொழுப்புக் கூட்டுநிலையத்தின் வெளியீடு சந்தைப்படுத்தல் தொடர்பான பிரச்சனைகளின் காரணமாக வீழ்ச்சியடைந்தது.

இவ்வாண்டில் உற்பத்தியில் அதிகரிப்புக்களைப் பதிவு செய்த அரசதுறைத் தொழில் முயற்சிகளாக அரச வடிசாலைகள் (158 சதவீதம்), இலங்கைப் பெற்றோலியம் (49 சதவீதம்), இலங்கை தோல் உற்பத்திப் பொருட்கள் (35 சதவீதம்), அரச அகழ்வும் கனிப்பொருள் அபிவிருத்தியும் (29 சதவீதம்), இலங்கை மட்பாண்டம் (17 சதவீதம்), களனி ரயர் (10 சதவீதம்), இலங்கை உருக்கு (5 சதவீதம்), அரச வன்கலம் (4 சதவீதம்), அரச இறப்பர் தயாரிப்பு (22 சதவீதம்) ஆகிய கூட்டுத்தாபனங்கள் விளங்கின.

அரசதுறைக் கைத்தொழில் வெளியீட்டின் பெறுமதியில் கிட்டத்தட்ட அரைப் பங்கிற்கு வகைகூறும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அதிகரித்த வெளியீட்டு மட்டத்திற்கு ஆண்டு முழுவதிலும் தடங்கலின்றி தூய்மி தொழிற்பட்டமை முதன்மைக் காரணியாக அமைந்தது. அரச வடிசாலைக் கூட்டுத்தாபனத்தின் அதிகரித்த உற்பத்திக்கு இவ்வாண்டில் கள்ளுச் சேகரிக்கும் பிரதேசங்களில் நிலவிய சாதகமான வானிலைத் தன்மைகளின் காரணமாக அதிகளவில் கள்ளு வழங்கப்பட்டமை பெருமளவு காரணமாக அமைந்தது. இலங்கை தோல் உற்பத்திப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தின் மேம்பட்ட செயலாற்றத்திற்குப் போதுமான அளவு மூலப்பொருட்கள் வழங்கப்பட்டமை முதன்மைக் காரணியாக அமைந்தது. அரச அகழ்வு கனிப்பொருள் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் மேம்பட்ட வெளியீட்டு மட்டம் அதி உயர் இயலளவுப் பயன்பாட்டில் பிரதிபலித்தது. வரையறுக்கப்பட்ட அரச இறப்பர் தயாரிப்புக் கூட்டுநிலையத்தின் அதிகரித்த உற்பத்திக்கு கிரேப் இறப்பரினால் பெறப்பட்ட அதிகரித்த விலையும் இவ்வாண்டில் நிலவிய சாதகமான வானிலைத் தன்மைகளும் முதன்மைக் காரணியாக அமைந்தன.

## அட்டவணை 1.20

### கைத்தொழில் முயற்சிகளுக்கு அரசின் நிதி மாற்றல்கள் 1988—1990

ரூபா பத்து இலட்சம்

| கூட்டுத்தாபனங்கள்/முயற்சிகள் | மூலதனம் | | | நடைமுறை | | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1988 | 1989 | 1990 (அ) | 1988 | 1989 | 1990 (அ) | 1988 | 1989 | 1990 (அ) |
| 1. தேசிய தாள் கூட்டுத்தாபனம் ... | — | — | — | 7.6 | — | — | 7.6 | — | — |
| 2. இலங்கை சீனிக் கூட்டுத்தாபனம் ... | 131.4 | 107.0 | 68.6 | — | 225.0 | — | 131.4 | 332.0 | 68.6 |
| 3. இலங்கை உருக்குக் கூட்டுத்தாபனம் ... | — | — | — | 48.3 | — | — | 48.3 | — | — |
| 4. தேசிய பாற்சபை ... | 2.5 | — | — | 28.9 | — | — | 31.4 | — | — |
| 5. அரச வளமாக்கி தயாரிப்புக்கூட்டுத்தாபனம் ... | — | — | — | 1.2 | — | — | 1.2 | — | — |
| 6. இலங்கை வளமாக்கிக் கூட்டுத்தாபனம் ... | 21.8 | 3.0 | — | 227.3 | — | — | 249.1 | 3.0 | — |
| 7. இலங்கை ஒட்டுப்பலகைக் கூட்டுத்தாபனம் ... | — | — | — | 7.1 | — | — | 7.1 | — | — |
| 8. தேசிய புடவைக் கூட்டுத்தாபனம் ... | 42.0 | 42.0 | 42.0 | — | — | — | 42.0 | 42.0 | 42.0 |
| 9. இலங்கை எண்ணெய் கொழுப்புக் கூட்டுத்தாபனம் | — | — | — | 8.5 | 5.6 | — | 8.5 | 5.6 | — |
| 10. அரச வன்கலக் கூட்டுத்தாபனம் ... | — | — | — | 3.5 | — | — | 3.5 | — | — |
| மொத்தம் ... | 197.7 | 152.0 | 110.6 | 332.4 | 230.6 | — | 530.1 | 382.6 | 110.6 |

(அ) மதிப்பிடப்பட்டவை.

மூலம்: திறைசேரி

அரசதுறைத் தொழில் முயற்சிகளின் துறைவாரியான பகுப்பின் நியதிகளின் படி 1990 இல் இரசாயனம் பெற்றோலியம் உற்பத்திகள் துறை அதி உயர் வளர்ச்சியினைப் பதிவு செய்தது (46 சதவீதம்), தாளும், தாள் உற்பத்திப் பொருட்களும் (9 சதவீதம்), அடிப்படை உலோக உற்பத்திகள் (5 சதவீதம்), உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் (4 சதவீதம்) என்பன வெளியீட்டில் அதிகரித்த மட்டங்களைப் பதிவு செய்த ஏனைய துறைகளாகும். வெளியீட்டில் வீழ்ச்சிகளைப் பதிவுசெய்த ஏனைய துறைகளாகப் புடவையும் அணியும் ஆடைகளும் தோற்பொருட்களும் (44 சதவீதம்), உணவு, குடிபானம், புகையிலை (14 சதவீதம்), மரமும், மர உற்பத்திப் பொருட்களும் (12 சதவீதம்) என்பன விளங்கின.

இவ்வாண்டில் பல கைத்தொழில் முயற்சிகளுக்கு இலாபத்தை உருவாக்க இயலுமாக இருந்தது. 1990 இல் இலாபத்தைக் காட்டிய தொழில் முயற்சிகள் இலங்கைச் சீமெந்துக் கூட்டுத்தாபனம் (ரூ. 3,450 இலட்சம்), வரையறுக்கப் பட்ட இலங்கை மட்பாண்டம் (ரூ. 1,250 இலட்சம்), வரையறுக்கப்பட்ட களனி ரயர் (ரூ. 1,160 இலட்சம்), வரையறுக்கப்பட்ட சிலோன் ஒட்சிசன் (ரூ. 510 இலட்சம்), வியாங்கொடை புடவை ஆலை (ரூ. 490 இலட்சம்), அரச அகழ்வு, கனிப்பொருள் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் (ரூ. 430 இலட்சம்), அரச உருக்குக் கூட்டுத்தாபனம் (ரூ. 110 இலட்சம்), தேசிய உப்புக் கூட்டுத் தாபனம் (ரூ. 80 இலட்சம்), வரையறுக்கப்பட்ட அரச இறப்பர் தயாரிப்புக் கூட்டு நிலையம் (ரூ. 50 இலட்சம்), வரையறுக்கப்பட்ட இலங்கை எண்ணெய், கொழுப்புக் கூட்டு நிலையம் (ரூ. 20 இலட்சம்) என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

இவ்வாண்டில் அரசதுறைத் தொழில் முயற்சிகளுக்கான வரவு செலவுத் திட்ட மாற்றல்கள் ரூ. 1,110 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 71 சதவீதம் குறைவானதாகக் காணப்பட்டன. இவ்வாண்டில் இலங்கைச் சீனிக் கூட்டுத்தாபனமும், தேசிய புடவைக் கூட்டுத்தாபனமும் மூல தன மாற்றல்களாக முறையே ரூ. 690 இலட்சத்தினையும், ரூ. 420 இலட்சத் தினையும் பெற்றுக்கொண்டன.

**வலுவும் எரிபொருளும்**

1990 இல் இலங்கை மின்சபைக்கானவை தவிர்ந்த கைத்தொழில் எரி பொருளின் விற்பனை 4 சதவீதத்தினால் அதிகரித்தது. இவ்வாண்டில் உலை எண்ணெயின் விற்பனைகள் 6 சதவீதத்தினால் அதிகரித்தவேளையில் பார டீசலின் விற்பனைகள் 11 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.

1990 இல் கைத்தொழிலில் மின் பாவனை 6 சதவீதத்தினால் அதிகரித்தது. இது சிறிய அளவுக் கைத்தொழில்களின் 20 சதவீத அதிகரிப்பையும் நடுத்தர கைத்தொழில்களின் 4 சதவீத அதிகரிப்பையும் பெரும் கைத்தொழில்களின் 6 சதவீத அதிகரிப்பையும் கொண்டிருந்தது.

அட்டவணை 1.21

**கைத்தொழிலில் வலு, எரிபொருள் என்பனவற்றின் பயன்பாடு 1989—1990**

| விடயம் | 1989 | 1990(அ) |
|---|---|---|
| 1. மின்வலு (கிகாவாட் மணித்தியாலங்கள்) (ஆ) ... ... ... | 848.7 | 887.3 |
| 1.1 சிறு கைத்தொழில் ... ... ... | 43.3 | 53.5 |
| 1.2 நடுத்தரக் கைத்தொழில் ... ... ... | 459.2 | 467.5 |
| 1.3 பெரிய கைத்தொழில் ... ... ... | 346.2 | 366.3 |
| 2. கைத்தொழில் எரிபொருளின் உள்நாட்டு விற்பனைகள் ('000 மெற்றிக் தொன்கள்) (இ) ... ... ... | 173.7 | 180.5 |
| 2.1 பார டீசல் ... ... ... | 22.7 | 20.1 |
| 2.2 உலை எண்ணெய் ... ... ... | 151.0 | 160.4 |

மூலங்கள்: இலங்கை மின் சபை.
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்.

(அ) தற்காலிகமானவை.

(ஆ) தயாரிப்பு, ஏற்றுமதிப் பதனிடல் கைத்தொழில்களை உள்ளடக்குகின்றது. சிறுகைத்தொழில் 50 கிலோ வாட்டுக்குக் குறைந்ததும், நடுத்தரக் கைத்தொழில் 50–500 கி. வாட்டையும், பெரும் கைத்தொழில் 500 கி. வாட்டுக்கு மேற்பட்ட இயலளவினையும் கொண்ட கூறுகளாகும்.

(இ) இலங்கை மின்சபைக்கான விற்பனைகள் நீங்கலாக.

## தனியார் வெளிநாட்டு முதலீடு

### முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்கள்

1990 சனவரியில் வெளிநாட்டு முதலீட்டு மதியுரைக் குழுவுடன் ஒன்றிணைக்கப்பட்டு வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்குப் பணிகளை வழங்கும் ஒருமுகப் படுத்தப்பட்ட நிலையமாக மாற்றப்பட்ட கொழும்பு பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழு 1990 இல் கொழும்பு பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழு என்ற தகு நிலையில் 30 செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளித்ததுடன் 1990 இறுதியில் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் மொத்த எண்ணிக்கை 337 இற்குக் கொண்டு வரப்பட்டது. இவற்றில் கைத்தொழில்களை நிறுவுவதற்காக 194 செயற்றிட்டங்கள் கொழும்புப் பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழுவுடன் ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டிருந்தன. 1990 இறுதியில் மொத்தமாக 120 தொழில் முயற்சிகள் வர்த்தகத் தொழிற்பாட்டில் ஈடுபட்டிருந்தன. உற்பத்தியிலீடுபட்டிருந்த இச்செயற்றிட்டங்களில் 63 கட்டுநாயக்கா முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்திற்குள்ளேயும், 23 பியகம முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்திற்குள்ளேயும், 32 நாட்டின் ஏனைய வேறு பல பாகங்களிலும் காணப்பட்டன.

1990 இல் கொழும்பு பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழுவினால் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள், ஒப்பனை வாசனைப் பொருட்கள் மற்றும் ஏனைய தூரிகைகள், மண் மேம்படுத்து கருவிகள், வலுவைச் சேமிக்கும் மின் குமிழ்கள், கூம்பு நூலிழைகள், சத்திர சிகிச்சை மற்றும் இறப்பர் கையுறைகள் உருவமைப்புக்கள், உந்து உதிரிப்பாகங்கள், கருங்கற் பாளங்கள், உறுதி நுட்ப தொய்வு நாடா ரயர்கள், அணியும் ஆடைகள், பைகள், திணிக்கப்பட்ட ...பாட்டுப் பொருட்கள், தும்புத் தூசு உற்பத்திப் பொருட்கள் என்பன உள்ளடக்கியிருந்தன.

அட்டவணை 1.22

## முதலீட்டு ஊக்குவிப்பு வலயம்—தொழில் வாய்ப்பும் ஏற்றுமதி வருவாய்களும் 1989—1990

| வகை | 1989 | | 1990(அ) | |
|---|---|---|---|---|
| | தொழில் நிலை (திசெம்பர் முடிவில்) எண்ணிக்கை | மொத்த ஏற்றுமதி வருவாய்கள (க.எ.பெ.) ப இ.ரூ. | தொழில் நிலை (திசெம்பர் முடிவில்) எண்ணிக்கை | மொத்த ஏற்றுமதி வருவாய்கள் (க.எ.பெ.) ப. இ. ரூ.. |
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை ... | 1,135 | 379 | 1,633 | 849 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் ... | 42,925 | 8,825 | 49,554 | 11,669 |
| 3. மரத்துண்டு மர உற்பத்திகள் (தளபாளங்கள் உட்பட) ... | 69 | 9 | 44 | 6 |
| 4. இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் ... | 2,049 | 405 | 2,765 | 503 |
| 5. உலோகமல்லாத கனிப்பொருள் உற்பத்தி (பெற்றோலியமும் நிலக்கரியும் தவிர்த்து) | 4,431 | 666 | 5,502 | 1,811 |
| 6. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும் | 1,287 | 621 | 1,436 | 750 |
| 7. வேறெங்கும் குறிப்பிடப்படாத உற்பத்திகள் ... | 5,312 | 703 | 6,024 | 1,213 |
| 8. பணிகள் (ஆ) ... | 4,221 | 244 | 4,400 | 724 |
| மொத்தம் ... | 61,429 | 11,852 | 71,358 | 17,525 |

மூலம்: கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு

(அ) தற்காலிகமானவை.
(ஆ) "எயர் லங்கா" நீங்கலாக.

1990 இல் கொழும்புப் பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழுவின் மொத்த ஏற்றுமதி வருவாய்கள் ரூ. 175,250 இலட்சமாக (சிஎஉ 3,220 இலட்சம்) விளங்கி முன்னைய ஆண்டைவிட 47.9 சதவீத அதிகரிப்பைக் காட்டின. சிஎஉ நியதிகளில் அதிகரிப்பு 26.3 சதவீதமாக இருந்தது. புடவைகள் மற்றும் அணியும் ஆடைகள் துறை ஏற்றுமதி வருவாய்களின் 66.5 சதவீதத்திற்கு வகை கூறியது.

ஒரு முகப்படுத்தப்பட்ட நிலையம் நிறுவப்பட்டதைத் தொடர்ந்து கொழும்பு பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழு வெளிநாட்டு முதலீட்டு மதியுரைக் குழுவின் தகு நிலையில் 47 செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளித்தது. இவை கொழும்புப் பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழுவின் சலுகைகளுக்கு உரித்தானவையல்ல. இந்தச் செயற்றிட்டங்களில் எதிர்பார்க்கப்பட்ட மொத்த முதலீடு ரூ. 10,890 இலட்சமாக விளங்கியதுடன் முதலீட்டின் வெளிநாட்டுக் கூறு ரூ. 2,800 இலட்சமாகவும், உள்நாட்டுக் கூறு ரூ. 8,100 இலட்சமாகவும் காணப்பட்டது. இத்தொழில் முயற்சிகளின் தொழில் வாய்ப்பு இயலளவு 4,858 ஆட்களாக இருந்தது.